**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்</u>**

முன்னிலை – **சி.ப. முல்லை வாணன், B.A.B.L..(Hons).,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிபதி

***2026 ஆம் ஆண்டு மே மாதம் 14 ம் நாள் வியாழக்கிழமை***

*திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பாரபவ வருடம் சித்திரை திங்கள் 31 ஆம் தேதி*

**<u>ஆண்டுப்படிக்கை வழக்கு எண்.411/2025</u>**

**<u>(CNR.NO. TNCG10-003732-2025)</u>**

<u>குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106 ன் மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சுற்றறிக்கை ஆர்.ஓ.சி.எண்.814/2021/ஆர்ஜி/ஜி1 தேதி 07.04.2021 படி கீழ்கண்ட அட்டவணை இணைக்கப்படுகிறது</u>

| **எண்** | **வழக்கின் விபரம்** | | |
|---|---|---|---|
| 01 | காவல் நிலையத்தின் பெயர் | – | அனைத்து மகளிர் காவல் நிலையம், தாம்பரம். |
| 02 | காவல் நிலைய குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் | – | குற்ற எண். 15/2013<br>இதச பிரிவுகள் 498 (ஏ), |
| 03 | குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர் மற்றும் இருப்பிடம் பற்றிய விபரங்கள் | – | 1) ராஜேஷ், வ.25<br>த/பெ பக்தன்<br>2. கௌரி வ.45<br>க/பெ பக்தன்<br>இருவரின் விலாசம் எண்.194, 38 வது தெரு, சங்கர் நகர், பம்மல், சென்னை. |
| 04 | குற்ற நிகழ்வு நாள் | – | 01.07.2013 |
| 05 | முறையீடு மற்றும் வழக்கு கோப்பில் எடுத்த நாள் | – | 30.09.2013 |
| 06 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள் | – | எதிரிகள் கைது செய்யப்படவில்லை |
| 07 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | – | எதிரிகள் கைது செய்யப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 08 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையின் பேரில் விடுவிக்கப்பட்ட நாள் | – | எழவில்லை |
| 09 | இவ்வழக்கு மேல் நடவடிக்கை குறித்து மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாள் | – | எழவில்லை |
| 10 | ஒப்படைத்தல்/ அனுப்பிவைத்தல் | – | எழவில்லை |
| 11 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | – | 20.11.2013 |
| 12 | கு.வி.மு.ச பிரிவு 240 கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 04.10.2016 |
| 13 | கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழான மனுவை தவிர பிற மனுக்களின் விபரம் | | 1)கு.வி.மு.ச. பிரிவு 311–கீழ் நாள் –13.02.2026 என சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது.<br>2)கு.வி.மு.ச. பிரிவு 320–கீழ் நாள்–13.02.2026 என சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது.<br>3)கு.வி.மு.ச. பிரிவு 311–கீழ் நாள் –13.02.2026 என கூடுதல் சாட்சி விராணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>14</td><td>அரசுதரப்பு சாட்சிகளிடம் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த நாள்</td><td>–</td><td><table>
<tr><th>அ.சா.</th><th>மு.வி.</th><th>கு.வி.</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>12.12.2017,<br>08.01.2019</td><td>08.01.2019,<br>13.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>14.05.2019</td><td>14.05.2019</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>18.06.2019</td><td>18.06.2019</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>21.01.2020</td><td>21.01.2020</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>27.09.2022</td><td>27.09.2022</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>15.05.2023</td><td>15.05.2023</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>13.06.2023</td><td>13.06.2023</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>13.02.2026</td><td>13.02.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15</td><td>கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் கேள்வி வினவப்பட்ட நாள்</td><td>–</td><td>02.03.2026</td></tr>
<tr><td>16</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் தலைமறைவு எதிரிகள் மற்றும் தலைமறைவு எதிரிகள் ஆஜரான விபரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>17</td><td>மேலமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை ஆணை மற்றும் முடிவுகள்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>18</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td>–</td><td>07.05.2026</td></tr>
<tr><td>19</td><td>தண்டனை அல்லது தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td></td><td>14.05.2026</td></tr>
<tr><td>20</td><td>தீர்ப்பு நகலை வழங்குதல் / குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான முடிவு</td><td></td><td>இறுதியாக, அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 498(ஏ), கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரிகளின் பிணையப் பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணையபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |
| 21 | காலதாமதத்திற்கான விளக்கம் | | சாட்சிகள் ஆஜர்படுத்த காலதாமதம் ஆனதால், வழக்கை முடிக்க காலதாமதம் ஏற்பட்டது. |

இவ்வழக்கானது மாண்பமை தாம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1ல் அ.வ.எண்.1125/2013 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு மாண்பமை செங்கல்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற டி.எண். 8101/2022, நாள் 04.11.2022 தேதி உத்தரவின் படி மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு ஆ.வ.எண்.411/2025 என கடந்த 12.12.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வெள்ளிதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும்,

இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

**01) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

அரசு தரப்பு வழக்கானது நிகழ்நிலை புகார்தாரர் திருமதி.சங்கீதா 1ம் எதிரியும் காதலித்து மதுரையில் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டு, திண்டிவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து சைதாப்பேட்டையில் தனிக்குடித்தனமாக வாழ்ந்துவந்ததாகவும், இருவருக்கும் ஒரு பெண் குழந்தை இருப்பதாகவும், 1வது எதிரி தன் அம்மா வீட்டிற்கு சென்று விட்டு வருவதாக சொல்லி சென்றவர் வராமல் நிகழ்நிலை புகார்தாரருக்கு போன் செய்து உங்க வீட்டில் 10 சவரன் நகை போடச்சொல்லு இல்லை என்றால் என் அம்மா பார்க்கும் பெண்ணை பார்த்து திருமணம் செய்துகொள்வேன் என்று கூறிய பிறகு நிகழ்நிலை புகார்தாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடன் சென்று எதிரிகளின் வீட்டிற்குசென்று கேட்கும்போது எதிரிகள் 10 சவரன் நகையுடன் வந்தால் வாழ்க்கை இல்லையென்றால் வாழ்க்கை கிடையாது என்று கேவலமாக திட்டியதாக நிகழ்நிலைபுகார்தாரர் எதிரிகள் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 498 (ஏ)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது இதச பிரிவு 498 (ஏ)ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

02) இவ்வழக்கில் எதிரிகள் எவ்வித பிணையும் பெறவில்லை.

03) குற்ற இறுதியறிக்கை பரிசீலனைக்குப் பின் எதிரிகளுக்கு எதிராக மேற்படி வழக்கு எண்ணில் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் படி வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும். வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளுக்கு

எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவுசெய்து கு.வி.மு.ச பிரிவு 240–ன் படி, எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 498 (ஏ) கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரிகளுக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டுகள் விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்து, வழக்கு விசாரணையை எதிர் கொள்வதாக கூறி, வழக்கு விசாரணைக்கு வேண்டினார். அதனால், அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

04) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும். புகார் மனு அ.சா.ஆ.1, திருமண பதிவு சான்றிதழ் அ.சா.ஆ.2, புகைப்படம் அ.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4, ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற சாட்சிகள் விசாரிக்கப்படாமல் அரசுதரப்பில் நீக்கறவு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் –</u>

5.1) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 சங்கீதா என்பவர் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் ஈக்காட்டுதாங்கல் அம்மாள் நகரில் உள்ள ராதிகாம்பெனியில் 2011ல் வேலை பார்த்து வந்தேன் என்றும் அங்கு தன்னுடன் ராஜேஷ் என்பவரை காதலித்து வந்தேன் என்றும் தான் அதே வருடத்தில் கர்ப்பம் அடைந்ததால் ராஜேவின் பெற்றோர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளாதானும் ராஜேஷ் என்பவரும் மதுரைக்கு சென்று கடந்த 13.08.2011ம் ஆண்டு திருமணம்செய்து கொண்டோம் என்றும் தன் பெற்றோர்கள் மதுரை வந்து அழைத்து தனக்கும் ராஜேஷிற்கும் திருமணம் செய்து வைத்தார்கள் என்றும் கடந்த 2011 அன்று வேலைக்கு செல்வதாக சொல்லி விட்டுசென்ற தன் கனவர் வீட்டிற்கு வரவில்லை என்றும் தான் கைபேசியில் தொடர்பு கொண்டளேது கைபேசியை ஆப் செய்து விட்டார்

என்றும் அதன் பின்னர் தன் பெற்றோர்கள் சென்றுகேட்டபோது தன் மாமியார் தன் கணவர்அங்குதான் உள்ளார் என்றும் அவரை அனுப்ப முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள் என்றும் அதன்பின்னர் தன் கணவர் தனக்கு போன் செய்து தன்னை உறவினர் வீட்டில் வைத்துள்ளார்கள் என்றும் வெளியே செல்ல அனுமதிக்க மாட்டார்கள் என்றும் சொன்னதாகவும் தன் பெற்றோருடன் சென்று பேசியபோது தன் மாமியார் தன்னை கட்டையால் அடித்தார் என்றும் தனது வலது கையில் காயம் ஏற்பட்டது என்றும் அதன் பின்பு 15.03.2012 ம் தேதி தனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றும் தன் கணவர் 5, 6 மாதங்கள் கழித்து தன் குழந்தையை வந்து பார்த்தார் என்றும் தான் 10 சவரன் நகை கொண்டு வந்தால் தான் தன் அம்மா என்னை சேர்த்து கொள்வார் என்று தன் கணவர் சொன்னார் என்றும் தன் கணவர் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள போவதாக கூறினார் என்றும் தான் தாம்பரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் அது அத.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் தன்னிடம் காட்டப்படும் திருமண பதிவு சான்றிதழ் தனது திருமணத்திற்கு பதிவு செய்தது என்றும் புகார் அத.சா.ஆ.2 என்றும் புகைப்படம் அ.சா.ஆ.3 என்றும் தனது கணவரும், மாமியாரும் தன்னை கொடுமைப்படுத்தியதால் தான் புகார் கொடுத்தேன் என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் தனது சாட்சியத்தில் சாட்சியமளித்துள்ளார்.

5.2) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 2 அஞ்சலை என்பவர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் அ.சா.1 சங்கீதா தன் மகள் என்றும் அவர் தன்னுடன் வேலை பார்த்துவந்த ராஜேஷ் என்பவரை காதலித்து மதுரைக்கு சென்று திருமணம் செய்துகொண்டார் என்றும் அதன் பிறகு தன் மகள் விஜிபி சாலையில் தனியாக வீடு எடுத்து தனிக்குடித்தனம் செய்து வந்தார் என்றும் தன் மகளுக்கு பெண் குழந்தை பிறந்தது என்றும் முதல் எதிரி தன் மகளிடம் தன் தாயை பார்த்து விட்டு தன் வருகிறேன் என்று சென்றவர்

பின்பு வரவில்லை என்றும் தன் மகள் முதல் எதிரிக்கு போன் செய்து கேட்டபோது 10 சவரன் நகை வரதட்சணையாக கொண்டு வந்தால் தான் 2ம் எதிரி தன்மகளை ஏற்றுக்கொள்வார் என்றும் சொன்னார் என்றும் தாங்கள் எதிரிகள் வீட்டிற்கு சென்று கேட்டபோது 2ம் எதிரி தன் மகனை உள்ளேயே இல்லை என்று மகள் பேசிக்கொண்டிருக்கும் போதே தன் மகளை அடித்து விட்டார்கள் என்றும் தாங்கள் தாம்பரம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.3) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 3 ஸ்டாலின் என்பவர் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் நிகழ்நிலை புகார்தாரர் சங்கீதா தன் வீட்டின் பக்கத்து தெருவில் வசித்துவருகிறார் என்றும் அவர் கிண்டியில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்த போது தன்னுடன் பணிபுரிந்த ராஜேஷ் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றும் ராஜேஷ் வீட்டிற்கு சங்கீதா சென்றபோது அவர்களுக்கு வாய் தகராறு ஏற்பட்டது என்றும் அப்போது ஊர் பெரியவர்கள் என்ற வகையில் தானும் அங்கு சென்று இருந்தேன் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

5.4) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 4 நகேந்திரன் என்பவர் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன் என்றும் சுமார் 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பு தன் நண்பர் ஸ்டாலின் தாம்பரம் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தார் அவருடன் தானும் சென்றிருந்தேன் என்றும் சங்கீதா, ராஜேஷ் தனக்கு தெரியாது வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

5.5) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 5 லஷ்மி என்பவர் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது சைதாப்பேட்டையில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன் என்றும் தேதி தனக்கு ஞாபகம் இல்லை. தான் குடியிருக்கும் வீட்டின் பக்கத்து வீட்டில் இருக்கும் ராஜேஷ் மற்றும் சங்கீதா ஆகியோர் குடியிருந்து வந்தனர் என்றும் அவர்கள் இருவருக்கும் ஒரு பெண் குழந்தை இருந்தது என்றும் ராஜேஷ் என்பவர் அவரது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது அம்மா வை பார்க்க சென்றார் என்றும் ஆனால் திரும்பி வரவே இல்லை. இதனால் ராஜேஷின் மனைவி சங்கீதா மற்றும் அவரது தயார் ஆகியோர் ராஜேஷின் அம்மா வீட்டிற்கு சென்றார்கள் ராஜேஷின் தாயார் 10 சவரன் நகை போட்டால்தான் தன் மகன் ராஜேஷை அனுப்புவேன் என்றும் கூறினார் என்றும் ஆஜர் எதிரியை சாட்சியால் அடையாளம் காட்ட இயலவில்லை. இந்த சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.6) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 6 தனலஷ்மி என்பவர் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது சைதாப்பேட்டையில் வசித்து வருகிறேன் என்றும் சங்கீதா என்பவர் எனது வீட்டின் அருகில் சங்கீதாவும் அவரது கணவரும் மற்றும் அவரது குடும்பத்தினரும் தனது வீட்டின் அருகே குடியிருந்து வந்தார்கள் என்றும் திடீரென ஒரு நாள் அவர்களது வீட்டில் பிரச்சினை ஆனது என்றும் தான் என்ன என்று கேட்டபோது ஆஜர் எதிரி அவருடைய தாய் வீட்டிற்கு சென்றதாகவும் மீண்டும் வீட்டிற்கு வர மறுக்கிறார் என்றும் அசா 1 தன்னிடம் சொன்னார் சங்கீதாவிற்கு பெண் குழுந்தை பிறந்தது அந்த குழுந்தையை இரு முறை ஆஜர் எதிரி வந்து பார்த்தார் ஆஜர் எதிரியின் தாயார் சங்கீதாவுடன் எதிரி வாழ வேண்டும் என்றால் 10 சவரன் நகை கொடுத்தால்தான் வாழ முடியும் என்று கூறியதாக தன்னிடம் கூறினார். இந்த சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.7) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 7 காவல் உதவி ஆய்வாளர் யாசோதா என்பவர் அ.சா.7 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி சிபிசிஜடி யில் ஆய்வாளராக இருந்து 2020 ல் ஓய்வு பெற்றுள்ளேன், தான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 03.12.2012 ம் தேதி உதவி ஆய்வாளராக இருந்தபோது சங்கீதா என்பவர் நிலையம்ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மனு ரசீது எண்.842/2012 அளித்தேன் பின்னர் அந்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டேன் என்றும் விசாரணை செய்யும்போது இருவரும் நாங்கள் குடும்ப நல நீதிமன்றதில் பார்த்துகொள்வதாக தன்னிடம் எழுதி கொடுத்துவிட்டு சென்றார்கள் என்றும் அதன்பிறகு தாம்பரம் குற்றவினல் நடுவர் நீதிமன்றதிலிருந்த கிடைத்த உத்தரவின் அடிப்படையில் இதச பிரிவு 498 ஏ வில் முதல் தகவல் அறிக்ளை பதிவு செய்தேன் இந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறுறியீடு செய்யபடுகிறது என்றும் ஆஜர் எதிரிக்கும் அவரது அம்மாவிற்கும் உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் சாட்சிகள் சங்கீதா, அஞ்சலை, ஸ்டாலின், ராஜேந்திரன், லட்சுமி, தனலட்சுமி ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தோன் பின்னர் இந்த வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு சமர்பித்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.8) இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் யாசோதா என்பவர் அ.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது பல்லாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன் என்றும் தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த காவல் ஆய்வாளர் ராமேஸ்வரி பணி மாறுதலில் சென்றுவிட்டார். அவரது கையொப்பம் நன்கு பரிச்சயம், அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் காவல் ஆய்வாளர் ராமேஸ்வரி என்பவர் காவல் உதவி ஆய்வாளர் யசோதா தன்னிடம் சமர்ப்பித்து வழக்கு கோப்புகளை தனது புலன் விசாரணைக்கு எடுத்தக்கொண்டு சாட்சிகளை மறு

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து தன்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 498(எ) கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6) அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியப் பகுதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் படி கூறி வினவியபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**தீர்வுக்குரிய பிரச்சனை –**</u>

07) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்தும், இருதரப்பு வாதங்களிலிருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலிருந்தும், தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 498(A)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

08) கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரை வரதட்சணையாக பணமும், நகையும் வாங்கி வருமாறு அடிக்கடி அடித்து கொடுமைபடுத்தி வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள் என அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு உரிய தண்டணை வழங்கவேண்டும் என வாதிட்டார்.

9) கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசு தரப்பு சாட்சியின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை என்றும்,நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகள் ஆகியோர் தங்களுக்குள் சமாதனம் செய்துகொண்டார்கள் என்றும் எனவே எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**தீர்வு –**

10) இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் நிகழ்நிலை புகார்தாரர் திருமதி. சங்கீதா என்பவர் தன்னை எதிரிகள் கொடுமைபடுத்தி துன்புறுத்தல் செய்ததாக எதிரிகள் மீது புகார் மனு கொடுத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. மேற்படி புகார் மனுவின் பேரில் எதிரிகள் ராஜேஷ் மற்றும் கௌரி ஆகியோர்கள் மீது இதச பிரிவுகள் 498 (ஏ), கீழ் குற்ற எண்.15/2013 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 498 (ஏ), கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

11) அ.சா.1 தனது முதல் விசாரணையில் தான் கொடுத்த புகார் மனுவை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ள நிலையில் அதன் பின்பு எதிரிகளுடன் சமரசம் செய்துகொண்டதாக அ.சா.1 மற்றும் எதிரிகள் இணைந்து கடந்த 13.02.2026 அன்று கு.வி.மு.ச. பிரிவு 320–கீழ் கு.ப.ம.எண்.111/2026 என சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் சமரசம் செய்யமுடியாத குற்றம் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ததில் அ.சா.1 தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், வழக்கை மேல்நடத்த விருப்பம் இல்லை என்றும் தன்னை யாரும் வற்புறுத்தவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளதன் மூலம் அ.சா.1 தனது முதல் விசாரணைக்கும் அரசு தரப்பு வழக்கிலிருந்தும் வேறுபட்டு

சாட்சியமளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே, மேற்படி அ.சா.1 ன் முரண்பாடான சாட்சியம் நம்பத்தகுந்தவையாக அமையாத நிலையில் மேற்படி அ.சா.1 ன் முரண்பாடான சாட்சியம் எதிரிகள் மீதான குற்றசாட்டை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

12) இவ்வழக்கில் அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, ஆகியோர் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை. அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் அ.சா.1 க்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால் மேற்படி அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, ஆகியோர் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை மேற்படி சாட்சிகளின் சாட்சியம் கேள்விநிலை சாட்சியமாகும். இவ்வழக்கில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், வழக்கை மேல்நடத்த விருப்பம் இல்லை என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம் அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, ஆகியோர் அ.சா.1 க்கு ஆதரவாக சாட்சியமளித்திருந்தாலும் அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்திலிருந்து அரசு தரப்பு வழக்கிலிருந்தும் வேறுபட்டு சாட்சியமளித்துள்ளதாலும் அ.சா.1 முரண்பாடான சாட்சியமளித்துள்ளதால் மேற்படி அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.6, ஆகியோரின் சாட்சியம் அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13) இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக அ.சா.7 மற்றும்கூடுதல் சாட்சியான அ.சா.8 ஆக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.7, அ.சா.8–ன் சாட்சியமானது இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அவரது அரசு பணியை செய்யும் போது சொன்ன சாட்சியமாகவே கருதமுடியும். எனவே அ.சா.7, அ.சா.8 ன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் தான் குற்றவாளிகள் என தீர்மானிக்க முடியாது. அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான இவ்வழக்காவணங்கள் ஆகியவற்றையும் நன்கு பரிசீலனை செய்கையில், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

நிகழ்நிலை புகார்தாரான அ.சா.1 அரசுதரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் சாட்சியமளிக்காத நிலையில், இவ்வழக்கில் அ.சா.7, அ.சா.8 அரசுதரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ள போதிலும், அ.சா.7, அ.சா.8 இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி இல்லை என்பதாலும், அ.சா.7, அ.சா.8 ன் சாட்சியத்தின் உறுதிப்படுத்தும் வகையில் யாரும் சாட்சியம் அளிக்காத நிலையிலும், அ.சா.7, அ.சா.8 ன் மூலம் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் இவ்வழக்கில் எவ்வித முக்கியத்துவமும் பெறவில்லை. எனவே அ.சா.7, அ.சா.8 ன் சாட்சியம் மட்டும் எதிரிகளுக்கு தண்டனை பெற்றுதரபோதுமான சாட்சியமாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு எதிரிகள் மீதான வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் நிரூபிக்கத் தவறிவிட்டதாகவே இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

14) எதிரிகள் அ.சா.1 யை ஆபாசமான வார்த்தைகளால் வரதட்சனை பணம் கேட்டு அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்று அரசு தரப்பில் உரிய சாட்சியங்கள் மூலம் எதிரிகள் மீதான இதச பிரிவு 498(ஏ) கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15) ஆகவே, மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கு சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றதா என்பதும் எதிரிகள் அ.சா.1 யை வரதட்சனை பணம் கேட்டு அடித்து கொடுமைசெய்தார்களா என்பதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்வதே நீதியின்பால் நியாயமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் மீதான இதச பிரிவு 498(ஏ) ஆகிய பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16) இறுதியாக, அரசு தரப்பு எதிரிகள் மீதான இதச பிரிவு 498(ஏ)பிரிவின் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின்

பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரிகளின் பிணையப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணையபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

17) இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவுமில்லாததால், வழக்கு சொத்து குறித்த உத்தரவு எதுவுமில்லை.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள், வியாழக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/– சி.ப. முல்லை வாணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கபட்ட சாட்சிகள்.**

| வ.எண். | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி.சங்கீதா |
| 2 | அ.சா.2 | திருமதி.அஞ்லை |
| 3 | அ.சா.3 | திரு.ஸ்டாலின் |
| 4 | அ.சா.4 | திரு.நாகேந்திரன் |
| 5 | அ.சா.5 | திருமதி.லட்சுமி |
| 6 | அ.சா.6 | திருமதி.தனலட்சுமி |

| | | |
|---|---|---|
| 7 | அ.சா.7 | திருமதி.என்.யசோதா (காவல் உதவி ஆய்வாளர்) |
| 8 | அ.சா.8 | திருமதி.கே.யசோதா ( காவல் உதவி ஆய்வாளர்) |

**2. அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்.**

| எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 03.12.2012 | புகார் மனு |
| 2 | அ.சா.ஆ.2 | 11.08.2011 | திருமண பதிவு சான்றிதழ் |
| 3 | அ.சா.ஆ.3 | 11.08.2011 | திருமண புகைப்படம் |
| 4 | அ.சா.ஆ.4 | 01.07.2013 | முதல் தகவல் அறிக்கை |

**3) அரசுதரப்பு சான்றுபொருட்கள்:**– இல்லை

4) **எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் –** இல்லை.

**5. குறிப்பு.**

1. எதிரிகள் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள்.
2. எதிரிகள் விசாரணைக் காலத்தில் பிணையில் இருந்து வருகிறார்கள்.
3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Sd/– சி.ப. முல்லை வாணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

// உண்மை நகல் //

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

In the Court of DM cum JM at Pallavaram
C.C. 411/2025
Dated: 14.05.2026

Judgment Pronounced.

A1, A2. Accused present. Heard both sides. Records perused. Judgment pronouned. In result, this court finds that the prosecution has not proved the guilt of the A1, A2 accused for the offences Charges against U/s.498(A), of IPC beyond all reasonable doubt and the A1.A2. accused persons are entitled for the benefit of doubt and the A1.A2. Accused are found not guilty for the offences Charges U/s.498(A), of IPC and the accused are acquitted from the above charges as per section 248(1) of Cr.P.C and the A1, A2 accused are set at liberty. The bail bond of the A1, A2 accused shall be in force until the expiry of appeal period and the same shall stands cancelled after the expiry of appeal period. No case properties remanded in this case.Detailed Judgment vide separate sheet.

**DM-cum-JM,**
**Pallavaram.**